காலாண்டுத் தேர்வு – செப்டம்பர் 2016
பத்தாம் வகுப்பு – தமிழ் முதல் தாள்
விடை குறிப்புகள்

1. ஆ. குறள் 2. ஆ. சேரா 3. ஆ. ஆறு
4. ஆ. பாரத ரத்னா 5. இ. பாவாணர் 6. இ. தேவாரம்

7. திருவாதவூர் 8. நெற்கதிர் 9. எட்டுத்தொகை
10. மூடக்கருத்துகளையும் 11. மேடைப் 12. வேடிக்கையாக

13. எருமை 14. அழகு 15. குற்றமில்லாத 16. சிவன்

(17 – 20 பொருத்தமான விடை எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கவும்)
17. பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகை படைக்க வேண்டும் என்று விரும்பியர் யார்?
18. மிகப் பழமையான இலக்கண நூல் எது?
19. எப்படங்கள் வாயிலாக நிகழவுகளை நம் இருப்பிடத்திவேயே கண்டுகளிக்கலாம்?
20. எந்தெந்த நாட்டுடன் தமிழர்கள் வாணிகத்தொடர்பு கொண்டிருந்தார்கள்?

21. நல்லொழுக்கம்
22. 1. அரசியல் பிழைத்தோர்க்கு அறங் கூற்றாகும் 2. உரைசால் பத்தினையை உயர்ந்தோர் ஏத்துவர்
3. ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்.

23. 1. உன்னைப் பிரிந்து எனது இருப்பிடம் செல்லமாட்டேன்.
2. என்னலான அடிமைத் தொழிலை உனக்குச் செய்வேன்.

24. 1. பிறரிடம் பணிவுடையவனாய் இருத்தல் 2. ஒழுக்கநெறியில் நடத்தல்
3. சான்றோர் அறிவுரையைப் பின்பற்றுதல் 4. நுட்பமான நூல்களை ஆராய்தல்
5. அவை கூறும் நெறியில் வாழ்தல்

25. 1. சான்றோருடன் சேர்வர்

26. 1. அப்பூதியடிகள் களவு, பொய், காமம், சினம் முதலிய குற்றங்கள் நீங்கியவர்
2. வளமான இல்லற வாழ்வினர்.

27. 1. பிள்ளைப் பாண்டியன் 2. வில்லிபுத்தூர் ஆழ்வார் 3. ஒட்டக் கூத்தர்

**பகுதி -2**

28. 1. இயல், இசை, நாடகம் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது.
2. தமிழர் அகம், புறம் என்று வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்தனர்.

29. 1. அடிப்படைத் தேவைகள் 2. அகற்றப்பட வேண்டியவை

30. 1. மராட்டிய மாநிலம், அம்பவாடே ஊர் 2. 1894 – ஏப்ரல் 14

31. 1. திரு.வி.க. 2. பேரறிஞர் அண்ணா 3. பாரதியார் 4. குன்றக்குடி அடிகளார்

32. 1. பல்வகை விலங்குகளின் வாழ்க்கை 2. பன்னாட்டு மக்களின் வாழ்க்கை

33. 1. குமரி மலை 2. குமரி ஆறு 3. ப∴றுளி ஆறு

34. 1. மூவாயிரம்

## பிரிவு - 3

35. 1. எல்லாம் உடைய பெருமானே! உன் மேல் கொண்ட பேரன்பால் நான் உடல் வியர்த்தேன். உள்ளம் நடுங்கினேன்.
2. நறுமணம் கமழும் உன் திருவடிகளை மனதில் நினைத்துக் தலை மேல் கைகுவித்து வணங்கினேன். கண்களில் கண்ணீர் பெருகுமாறு உள்ளம் வருத்தி உருகினேன்.
3. பொய்ப்பொருளை விலக்கி மெய்ப்பொருளாம் உன்னையே நினைத்துத் துதித்தேன்.
4. உன் அரும்பெருஞ் செயல்கள் 'வெல்க! வெல்க!' எனப் போற்றிப் புகழ்ந்தேன்.
5. இத்தகையை ஒழுக்கத்தை நான் ஒருபோதும் கைவிடமாட்டேன்.
6. எனவே என்னையும் உன் அடியவருள் ஒருவனாக ஏற்று அருள்புரிவாயாக!

36. 1. கொற்கைத் துறைமுகத்தை உடைய பாண்டிய மன்னனே வாழ்வாயாக!
2. தென் பொதிகை மலையின் தலைவனே வாழ்க!
3. செழியனே வாழ்க!
4. தமிழ்நாட்டின் தென்பகுதிக்குத் தலைவனே வாழ்க!
5. இதுவரை பழிச்சொற்கள் சேராத பஞ்பிசனே வாழ்க!
என்று பாண்டிய மன்னனை வாயிற்காவலன் வாழ்த்தினான்.

37. 1. இராமனைக் கண்ட குகன், "உன்னோடு தங்கி உனக்குத் தொண்டு செய்வேன்" என்றான்.
2. கோதண்டம் என்னும் வில்லேந்தியவனும் ஆடவரில் நல்லவனுமாகிய இராமபிரான் சீதையையும் இலக்குவனையும் பார்த்தான்.
3. "இந்தக் குகன் நம்மிடத்தில் நீங்காத அன்பு உடையவன்" என்று கூறினான்.
4. அன்றிரவு குகனைத் தன்னுடன் தங்குமாறு கூறினான்.

38. 1. அரசால் சிறப்புச் செய்யப் பெறுதலும்
2. யானை, தேர், குதிரை முதலிய ஊர்திகளில் அரசர் முன் விரைந்து செல்லுதலும் செல்வச் சிறப்பன்று.
3. எளியோரைக் காப்பதே சிறந்த செல்வம்
4. தலைவியைக் காப்பாயாக.

39. 1. பொன், பவளம், முத்து, மாணிக்கம் ஆகியவை அயிகலனாக ஒன்று சேரும்.
2. சான்றோர், சான்றோருடன் சேர்வர்.
3. தீயவர், தீயவர் பக்கமே சேர்வர்.

## பகுதி – 2

40. 1. உலக இலக்கியங்களுள் முதன்மை பெற்று விளங்குபவை சங்க இலக்கியங்கள் ஆகும்.
2. அக்காலத்தில் இவ்வளவு விரிவான இலக்கியங்கள், உலகில் வேறு எம்மொழியிலும் இல்லை என்பது கமில்குவலபில் என்னும் மொழியியல் பேறறிஞரின் ஆய்வு முடிவு.
3. மாக்சுமுல்லர் என்னும் மொழிநூலறிஞர், "தமிழ் தனக்கே உரிய இலக்கியச் செல்வங்களைப் பெற்றுள்ள பண்பட்டமொழி என்று பாராட்டியிருக்கிறார்.
4. சங்க தொன்மக் கருத்துக்களின் அடிப்படையில் எழுதப்படாமல் மக்கள் வாழ்வியல் நெறிகளை வெளிப்படுத்துகின்றன.
5. 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்னும் புறநானூற்றுக் கருத்தும் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற குறள் நெறியும் தமிழ் இலக்கியங்கள் காட்டும் உயரிய விழுமியங்கள் ஆகும்.

41. 1. பெண்கள் கல்வி கற்றாலொழிய சமூகத்தில் மாற்றங்கள் ஏற்படாது.
2. ஆண்கள் பெண்களைப் படிக்க வைக்க வேண்டும்.
3. உலகப்படிப்பும், ஆராய்ச்சிப் படிப்பும் தாராளமாய்க் கொடுக்க வேண்டும்.

42. 1. 1946ஆம் ஆண்டு மக்கள் கல்விக் கழகத்தைத் தோற்றுவித்தார்.
2. மும்பையில், சித்தார்த்தா உயர்கல்வி நிலையத்தை உருவாக்கினார்.

43. 1. பேச்சின் சுருக்கத்தைக் கூறி முடித்தல்.
2. பாராட்டி முடித்தல்.
3. கவிதைக் கூறி முடித்தல்
4. உணர்ச்சியைத் தூண்டும் முறையில் முடித்தல்.

44. 1. உழவுத் தொழில் செய்பவரே உயர்ந்தவர்.
2. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்.
3. உழவுக்குச் சிறப்புப் பெற்றது மருத நிலம்.

**பிரிவு - 4**

45. 1. தமிழ் விடு தூது 2. அறிய இயலவில்லை 3. சிங்காதனம்
4. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா 5. நன்மை + ஏர் (அ) நல் + ஏர்

46. 1. அண்ணல் அம்பேத்கார் சிறந்த இலட்சியவாதி
2. சுதந்திரம் என்பது சுயேச்சையாக நடமாடும் உரிமை. உயிரையும் உடமைகளையும் பாதுகாக்கும் உரிமை.
3. ஓர் இலட்சிய சமூகம், சுதந்தரம், சமத்துவம் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டது என்றார்.
4. எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் வகையில் எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரியாக நடத்துவதே சமத்துவமாகும்.
5. சனநாயகத்தின் மறுபெயர் தான் சகோதரத்துவம்.

**பிரிவு - 5**

47. அ. 1. ஒழுக்கம் எல்லோருக்கும் சிறப்பைக் கொடுக்கும். எனவே ஒழுக்கத்தை உயிரினும் மேலாய்க் காக்க வேண்டும்.
2. ஒழுக்கம் உடையவர் உயர்குடிப்பிறந்தவராகவும் ஒழுக்கம் தவறியவர் தாழ்ந்த குடியில் பிறந்தவராகவும் கருதப்படுவர்
3. ஒழுக்கம் தவறினால் மீண்டும் ஒழுக்கமுடையவர் எனப்போற்றப்படுவது மிகவும் கடினம்.
4. கற்ற கல்வியினும் ஒழுக்கமே மேலானது.
5. ஒழுக்கம் கெட்டவனிடத்தில் பெருமை நிற்காது.
6. மனவலிமை உடையவர் ஒழுக்கத்தினின்றும் சிறிதும் தளர்ச்சி அடையார்.
7. நல்லொழுக்கத்தாலே எல்லோரும் உயர்வு அடைவர், ஒழுக்கம் தவறியவர் பெரும்பழியை அடைவர்.
8. நல்லொழுக்கம் இம்மையிலும் மறுமையிலும் இன்பத்தை உண்டாக்கும்.

47. ஆ. 1. ஆராய்ந்து அறியாத மன்னனே!
2. புறாவின் துன்பத்தைப் போக்கிய சிபி மன்னன்
3. பசுவின் துன்பத்தைப் போக்க மகனைக் கொன்ற மனுநீதிச்சோழன்
4. புகார் நகரம் நான் பிறந்த ஊர்.
5. மாசாத்துவானின் மகன் கோவலனை மணம் புரிந்தேன்.
6. ஊழ்வினைப் பயனால், வாழ்வதற்காக நின் மதுரை நகர் வந்தோம்.
7. உன்னால் கொலைசெய்யப்பட்ட கோவலன் மனைவி
8. கண்ணகி என்பது என் பெயர் என்று கூறினாள்.

48. அ. 1. **தொன்மை :**

முதல் மனிதன் தோன்றிய இடம் குமரிக்கண்டம்.
அவன் பேசிய மொழி தமிழ்.
என்றுமுள தென்தமிழ் - கம்பர்

2. **தனித்தன்மை :**

இயல், இசை, நாடகம் - மூன்று பிரிவுகள்.
அகம், புறம் - வாழ்வியல் இலக்கணம்.
திருக்குறள் - மாந்தர் இலக்கியம்.
இறவா, இலக்கண இலக்கிய வளம் கொண்டது.

3. **தாய்மைச் சிறப்பு**

தமிழ் திராவிட மொழிகளுக்கு தாயாக திகழ்கிறது.
1800 மொழிகளுக்கு வேர்ச்சொற்களையும்,
180 மொழிகளுக்கு உறவுப் பெயர்களையும் தந்துள்ளது.

4. **பொதுமைப்பண்பு :**

ஒன்றே குலம் ஒருவனே தேவன்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
பிறப்பொக்கும் உல்லா உயிர்க்கும்.

5. **நடுவு நிலைமை :**

சங்க இலக்கியங்கள் இனம், மொழி, மதம் கடந்தவை,
உலக மக்கள் அனைவருக்கும் பொதுவானவை
(வேறு பொருத்தமாக தலைப்புகளில் எழுதியிருப்பினும் மதிப்பெண் வழங்கவும்)

48. ஆ. 1. எடுத்தல், தொடுத்தல் மற்றும் முடித்தல் என்பன பேச்சின் முக்கூறுகள் ஆகும்.
2. கேட்போரை தன்வயப்படுத்தும் முறையில் தொடங்குதல் வேண்டும்.
3. சுருக்கமான முன்னுரையுடன் தொடங்குதல் வேண்டும்.
4. காலமறிந்து பேச வேண்டும்.
5. ஓரிரு மணித்துளிகளில் பொருளில் புகுந்துவிட வேண்டும்
6. இடத்திற்கும், சூழலுக்கும் ஏற்ப அமைதல் வேண்டும்.
7. நிரல்பட, திறம்பட, தெளிவாக, உணர்ச்சி ஒளிமின்ன, ஊக்கம் துடிக்க பேச வேண்டும்.
8. சொல்ல வேண்டிய கருத்துக்களை வரிசைப்படுத்தி, கேட்போர் மகிழும்படி பேச வேண்டும்.
9. உவமை, பழமொழி, சிறுகதை, நகைச்சுவைகளைக் கூறி பேச்சுக்கு அழகு சேர்த்தல் வேண்டும்.
10. பேச்சை முடிக்கும்போது கேட்போர் மனதில் பதியுமாறு சுருக்கக்கூறி முடிக்க வேண்டும்.

**பிரிவு - 5**

49. அ. ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

ஆ. காலம் கருதி இருப்பர், கலங்காது
ஞாலம் கருது பவர்.

இ. உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்
ஒருத்தர் தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்
தமிழொளியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்
இலவசநூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்
எங்கள்தமிழ் உயர்வென்று நாம்சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பலகழித்தோம்: குறைகளைந்தோ மில்லை
தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்.

- பாவேந்தர் பாரதிதாசன்

ஆ. பன்னீர் செல்வம்
பட்டதாரி ஆசிரியர் (தமிழ்)
அரசு உயர்நிலைப் பள்ளி
கங்கலேரி – 635 122
கிருஷ்ணகிரி மாவட்டம்
அலைபேசி : 9940731517
மின்னஞ்சல் : inikavi117@gmail.com

